# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2017.08.08 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


## சுக்யோ மகிகறி சிறிலங்கா (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**சுக்யோ மகிகறி சிறிலங்காவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கே. கே. பியதாஸ
அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## சுக்யோ மகிகறி சிறிலங்காவைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

"சுக்யோ மகிகறி சிறிலங்கா" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிலையமொன்று ஆத்மீக ரீதியான நிலையமொன்றாக, அதன் குறிக்கோள்களைப் பயனுற நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கங்களுக்காகவும், அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிலையத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காகவும் இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும்:

சொல்லப்பட்ட நிலையமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் நிறுவப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, சுக்யோ மகிகறி சிறிலங்கா (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*சுக்யோ மகிகறி சிறிலங்காவைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுக்யோ மகிகறி சிறிலங்கா நிலையத்தின் தற்போதைய உறுப்பினர்களும், இத்தால் உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகைய வேறு ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "சுக்யோ மகிகறி சிறிலங்கா" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை

2-PL 005337 - 300 (2017/07)

கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அதனை விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) மகிகறியின் படிப்பினைகளை இலங்கையில் பரப்புவதுடன் அதனுடன் தொடர்புபட்ட கருத்தரங்குகள் மற்றும் கற்கை வகுப்புகளை நடாத்துதல்;

(ஆ) நிலையத்தின் உறுப்பினர்களுக்கும் ஏனைய பொது உறுப்பினர்களுக்கும் ஞான ஒளியை வழங்குதல்;

(இ) வேறு நாடுகளிலுள்ள மகிகறி நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்புகளை மேற்கொண்டு அவற்றின் மார்க்கங்களைக் கடைப்பிடிப்பதுடன், நாடளாவியதும் உத்தியோகபூர்வமுமான நிலையங்களை அமைத்தல்;

(ஈ) ஜப்பானிலுள்ள சுக்யோ மகிகறியுடனான, இணைந்த நிறுவனங்களுடனான தொடர்புகளை அமைக்கவும் பராமரிக்கவும்;

(உ) நிலையத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உகந்தனவானவையும், தேவையானவையுமான விடயங்கள், பருவ ஏடுகள் அல்லது வேறு இலக்கியங்கள் மற்றும் தகவல்களை வெளியிடுதல்;

(ஊ) நிலையத்தின் ஊழியர்களாகச் செயலாற்றுவோருக்குத் தேவையான சட்டபூர்வ நலன்புரி சேவைகளை மேற்கொள்ளல்;

(எ) யோக்கோ கமச்செய்கை மையங்களை (சேதன ஆத்மீக கமச்செய்கை) உருவாக்குதலும் மேம்படுத்தலும்;

(ஏ) மேற்காண் குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையானவையும் உகந்தனவுமான ஏனைய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், கொண்டுநடாத்தவும், முடிவுறுத்தவும், தேவையேற்படின் ஒப்பந்தங்களிலும், உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடுதலும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், மானியக் கொடைகள், நன்கொடைகள், உதவுதொகைகள், சந்தாப்பணங்கள் என்பவற்றைக் காசாகவோ அல்லது பொருட்களாகப் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், கூட்டுத்தாபனத்தின் நிதியை மேம்படுத்துவதற்காக அதன் நிதிகளை உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மூன்று பணிப்பாளர்களையும்கொண்ட பணிப்பாளர் சபை ஒன்றினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஜப்பான் சுக்யோ மகிகறியின் ஆத்மீகத் தலைவரே கூட்டுத்தாபனத்தின் ஆளும் பணிப்பாளராவதுடன் அவரே கூட்டுத்தாபனத்தின் தலைவரையும் நியமித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற நிலையத்தின் பணிப்பாளர் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிருக்கும் தலைவர், செயலாளர் உட்பட பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைப் பின்வரும் எல்லா விடயங்களுக்கும் அல்லது அவற்றில் எவற்றுக்காகவும் காலத்திற்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(அ) உறுப்பாண்மை வகுக்கப்படுதல், அவர்களைச் சேர்த்தலும், விலக்குதலும், அவர்கள் விலகுதலும்;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்கள் பதவியிலிருந்து நீங்குதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல், பதவி தாங்குநர்களின் கொடுப்பனவுகள் அவர்களின் அதிகாரமும், கடமைகளும் நடத்தையும்;

(இ) ஆத்மீகத் தலைவரின் அங்கீகாரத்துடன் தலைவர் தவிர்ந்த ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்;

(ஈ) பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் நடத்தையை நிர்ணயித்தல்;

(உ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்கள் கடமைகள், பணிகள் மற்றும் நடத்தை;

(ஊ) பணிப்பாளர் சபையின் கூட்டங்களிற் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும், அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும் அவற்றின் கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும்;

(எ) தலைவர் மற்றும் செயலாளர் உட்பட 4 உறுப்பினர்களைக் கூட்ட நடப்பெண் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்; அத்துடன்

(ஒ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகள் அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியைப்போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள ஒழுங்கமைப்பின் விதிகள், அவை இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்திற்கு அல்லது அதன் கணக்கால் அன்பளிப்பு, கொடை, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கொடுப்பனவு, சந்தாப்பணங்கள், கட்டணங்கள் என்ற வகையாகக்

கிடைக்கப்பெறும் எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும், கணக்காய்வும்.*

**8**. (1) பணிப்பாளர்கள் சபையானது கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டு செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு முறையாவது பரிசோதனை செய்யப்பட்டுக் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், வருமான, செலவினக் கணக்கினதும், ஐந்தொகையினதும் சரி, பிழை பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

*நிலையத்தினால் செலுத்தப்படற்பாலனவும் நிலையத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.*

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்ற நிலையத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிலையத்திற்கு வருமதியான எல்லாக் கடன்களும் அல்லது செலுத்தப்படற்பாலதான சந்தாப்பணங்களும் உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாமென்பது.*

**10**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அன்பளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய

இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கலைக்கப் பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது, அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக் கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர் களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங் களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

உறுப்பினர் களின் பொறுப்பை வரையறுத்தல்.

**12.** மன்றத்தின் ஊழியர்களாக அப்போதைக்குள்ளவர்கள் அடங்கலாக, மன்றத்தின் எவையேனும் அலுவல்கள் தொடர்பில் செயற்படுகின்ற உறுப்பினர்களும் செயலாளரும் கணக்காய் வாளர்களும் முகாமையாளர்களும் ஏனைய அலுவலர்களும், அவர்களின் கடமையை நிறைவேற்றும்பொருட்டுச் செய்த ஏதேனும் செயலின் காரணமாக அவர்கள் அல்லது அவர்களில் எவரேனும் உறவேண்டிய அல்லது ஆளாகவேண்டிய அல்லது உறக்கூடிய அல்லது ஆளாகக்கூடிய எல்லா வழக்குகள், கிரயங்கள், பொறுப்புகள், இழப்புகள், நட்டஈடுகள், செலவுகள் என்பவற்றிலிருந்தும் அவற்றுக்கு எதிராகவும் நிறுவனத்தின் சொத்துக்களிலிருந்து நட்டோத்தரவாதம் அளிக்கப்படவும் தீங்கின்றிக் காப்பளிக்கப்படவும் வேண்டுமென்பதுடன், அவர் களில் எவரதும் செயல்களுக்காக, பெறுகைகளுக்காக, அசட்டை களுக்காக அல்லது தவறுகைகளுக்காக அவர்களில் எவர்தன்னும் பதில் சொல்லும் பொறுப்புடையவராகவும் இருத்தலாகாது.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவர் அல்லது செயலாளர், பொருளாளர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்